# நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளாக் நிறுவனம் 2010

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளாக் நிறுவனம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்குரிய உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியுள்ளது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளாக் நிறுவனத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

i. நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. நிறுவனத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட அனைத்து கணக்கீட்டு கொள்கைகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

iii. ஓடுவதற்கு பொருத்தமான நிலையிலுள்ள முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட 06 வாகனங்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

I. திறைசேரி உண்டியல் முதலீடுகளின் ரூபா 35,192 தொகையான வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

II. நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் கணக்குவைக்கப்பட வேண்டிய ரூபா 10 மில்லியன் தொகையான திறைசேரி உண்டியல்களின் முதலீடுகள் காசு மற்றும் காசுக்குச் சமமான சொத்துக்களாக கணக்குவைக்கப்பட்டிருந்தது.

III. கற்கைநெறிச் செலவுகள், செயற்திட்டச் செலவுகள், விதாதா நிகழ்ச்சித்திட்டச் செலவுகள் என்பனவாக முறையே ரூபா 4,376,575, ரூபா 1,215,436 மற்றும் ரூபா 1,267,669 தொகைகளான செலவுகள் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் செலவுகளை வகைப்படுத்தும் விபரம் காணப்படவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறவேண்டிய கணக்குகள்

I. வரிசை அமைச்சுக்களில் விதாதா நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பாகப் பெறவேண்டிய ரூபா 267,136 பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

II. 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 73,172 தொகையான 06 கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

III. ரூபா 5,783,422 தொகையான கடன்பட்டோர் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

I. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 145,510 தொகை 03 ஆண்டு காலமாகத் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

II. ரூபா 491,457 தொகையான கடன்கொடுத்தோர் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | | இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் | |
| | (i) | நி.பி 104 | மூன்று வாகன விபத்துக்கள் தொடர்பாக உரிய பரிசோதனை நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்கவில்லை. |
| | (ii) | நி.பி 371 (2) | ரூபா 20,000 இற்கு மிகையாக குறித்த நோக்கத்திற்கான கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 252,000 தொகையான 06 முற்பணங்களைத் |

தீர்த்துவைப்பதற்கு ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது.

| | | |
|---|---|---|
| (iii) | நி.பி 395(இ) | ஏதும் ஒரு மாதம் முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் 4 வங்கிக் கணக்குகள் தொடர்பாக இதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி 751,753 மற்றும் 804 | நிறுவகத்தின் நானாவித துறைகளுக்கு வழங்கப்பட்ட இருப்பேட்டுப் பொருட்கள் சம்பந்தமாக தொடர்புபட்ட நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நி.பி 760 மற்றும் 770 | பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் காணாமல் போன பொருட்கள் மற்றும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத பொருட்கள் சம்பந்தமாக தொடர்புபட்ட நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நி.பி 802 மற்றும் 1647(உ) | தொடர்புபட்ட நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வாகனப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) சுற்றுநிருபம்

---------------------

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது

முயற்சிகள் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 5.2.1 ஆம் பிரிவு | வருடாந்த பாதீட்டுடன் பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகையும் காசுப் பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 9.2 ஆம் பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், ஆட்சேர்ப்பு மற்றும் நடைமுறை அமைப்பு வரைபடம் என்பன தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2006.08.23 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபம் | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் சில பதவிகளுக்காக சம்பளங்கள் தயாரிக்கும் போது பிழையான சம்பள அளவுதிட்டத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்

கடன்பட்டோர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 571,712 தொகை பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் பேரில் பதிவழிக்கப்பட்டிருந்தும் இதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்

கற்கை நெறிகளை நடாத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வருமானப் பணம் சுழற்சி நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்டு அதிலிருந்து செலவு செய்தல் இடம்பெற வேண்டியுள்ளதாகவும் அதற்காக பொதுவான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது செயற்திட்டங்களிலிருந்தும் கற்கைநெறிகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட மிகைகளிலிருந்து ரூபா 2,167,143 தொகை நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் சிலருக்கு மத்தியில் சம்பளத்திற்கு மேலதிகமாகப் பகிரப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------------------

### 2.1 நிதிசார் மீளாய்வு

-----------------------------

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் செயற்பாடுகளின் நிதசார் விளைவுகளானது மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக் கொள்வதற்கு முன்னர் ரூபா 46,985,355 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 44,755,129 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 52,850,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக நிதிசார் விளைவுகளானது ரூபா 5,864,645 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 50,925,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அந்த ஆண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 6,169,871 மிகையாக இருந்தது.

#### 2.1.2 நிதிசார் நிலைமைகள்

-------------------------------------

மீளய்வாண்டின் இறுதியில் நிறுவனத்தின் தொழிற்பாட்டு மூலதனம் ரூபா 61,922,000 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் இறுதியில் அதனோடொத்த தொழிற்பாட்டு மூலதனம் ரூபா 37,435,000 ஆக இருந்ததனால் தொழிற்பாட்டு மூலதனத்தில் ரூபா 24,487,000 தொகையான அதிகரிப்பு ஒன்றைக் காட்டியுள்ளது. கடன்பட்டோர் மீதியில் அதிகரிப்பு மற்றும் முற்கொடுப்பனவு மீதியில் அதிகரிப்பு இந்த நிலைமைக்கு பிரதானமாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தொழிற்படு மூலதனத்தினை சிறந்த நிலைமைக்கு கொண்டுவருவதற்கு முகாமைத்துவம் முயற்சி எடுத்துள்ளது என்பதற்கான சான்றுகள் காணப்படவில்லை.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உபகரணம் பாவனைப்பொருட்கள், செயற்திட்டப் பொருட்கள், புத்தகங்கள் என்பவற்றினைக் கொள்வனவு செய்வதற்கு 04 ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 225,981 தொகையான வங்கி நாணயக் கடிதம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அப்பொருட்கள் இதுவரையும் நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) 2010 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3,727,077 பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அப்பொருட்கள் 2011 ஏப்ரல் 28 ஆந் திகதி வரையும் நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(iii) முறையான மதிப்பீடின்றி தேவையான அளவிற்கு மேல் முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 221,817 மொத்தச் செலவுகளின் 10 முற்பணங்களுக்காக ரூபா 389,000 வழங்கப்பட்டிருந்தது.

(iv) நஸ்டா செயற்திட்டத்தின் (Nasda Project) நோக்கங்களுக்கான நடவடிக்கைகளுக்காக கிடைத்த பணம் ஆண்டின் இறுதியில் ரூபா 400,000 தொகையான திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சொத்து | பெறுமதி<br>ரூபா | விபரம் |
|---|---|---|---|
| (i) | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்களில் மிகுதியாக உள்ள பாவனைப் பொருள் இருப்புக்களின் 44 விடயங்களும் கணனி உதிரிப்பாக இருப்புக்களின் 52 விடயங்களும் | | 2005 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| (ii) | ரோபோ அசையும் இயந்திரம் | 2,700,000 | 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட இந்த இயந்திரம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(i) பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 225,981 தொகையான வங்கி பணம் அனுப்புதல்கள் அந்த வழங்குனர் இல்லாமையினால் அறவிடமுடியாதிருந்தது.

### 2.2.4 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்

2003 யூன் 12 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பீஈடீ 12 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாத கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை நாளதுவரையாக்கி செயற்படும் நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் செயற்பாடு**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 21,770,000 தொகையான மூலதனம் மற்றும் ரூபா 52,850,000 தொகையான மீண்டுவரும் நிதியம் சம்பந்தமாக செலவுப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) முற்பணங்கள் வழங்கலும் தீர்த்துவைத்தல்களும்
(ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல்
(ஊ) வாகனப் பயன்பாடும் பதிவேடுகளைப் பேணலும்
(எ) பல்வேறு வைப்புக்களை ஏடுகளில் பதிதல்